# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2254 - 2021 නොවැම්බර් මස 12 වැනි සිකුරාදා - 2021.11.12

*2254ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி III - காணிகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 968 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 970 |


***கவனிக்க.***- *ஷைலி கல்விசார் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2021,ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

***முக்கிய அறிவித்தல்கள்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2021, திசெம்பர் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, நவெம்பர் மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

***கங்கானி லியனகே,***
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*


*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

967- B 082287 - 353 (2021/11)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

## காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் (104 ஆம் உட்பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*வடமத்திய மாகாணத்தில் அநுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள ராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் பீ.ஜீ.அபேகோன் ஆகிய நான் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) உட்பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1999ஆம் ஆண்டு பங்குனி மாதம் மூன்றாம் திகதி(03) வழங்கப்பட்டுள்ள அனு/ராஜா/பிர/4183 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான ராஜாங்கனை, யாய 11 எனும் முகவரியில் வசிக்கும் ராஜபக்ஷ முதியன்சேலாகே சுவர்ணா குமாரிஹாமி என்பவருக்கு கையளிக்கப்பட்டு அநுராதபுரம் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் 8871 இன் கீழ் 2003.09.01 ஆந் திகதி 533/71 ஆம் பதிவேட்டின் பக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லையென அறிக்கையிடப்பட்டுள்ளது.ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன்.இதுதொடர்பாக ஆட்சேபனை இருந்தால் அவற்றை 2021.12.03 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

**அட்டவணை**

*நில அளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 01 ஆம் இலக்க வெளிக்களத்தாளின் பிரகாரம் நில அளவை நாயகம் என்பவரினால் தயாரிக்கப்பட்ட ----- இலக்க துண்டுகள் வேறாக்கப்பட்ட வரைபடத்திலிருந்து நில அளவை நாயகம் என்பவரினால் நிர்மாணிக்கப்பட்ட இ.கு.வ. /அ 16 ஆம் இலக்க பிரதிப்படத்தில் காணித்துண்டு இலக்கம் 511 எனக் காட்டப்பட்டுள்ளதும், அநுராதபுரம் நிருவாக மாவட்டத்திற்குட்பட்ட ராஜாங்கனை பிரதேச செயலாளர் அலுவலக பிரிவைச் சேர்ந்த தெற்கு விலச்சிய கோரளையிலுள்ள 454 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த யாய 11 எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் 01 ஏக்கர் 01 றூட் 36 பேர்ச் விஸ்தீரணமுள்ளதுமான( மேட்டு நிலம்) அரச காணி. இதன் எல்லைகள் வருமாறு.-*

*வடக்கு : இலக்கம் 496 ஒதுக்கப்பட்ட பாதை;*
*கிழக்கு : இலக்கம் 512 காணி துண்டு மேட்டு நிலம்;*
*தெற்கு : யாய 10 மேட்டு நிலம்;*
*மேற்கு : இலக்கம் 510 காணி மேட்டு நிலம்.*

*ஜீ. ஜீ. சுனில் அபேகோன்,*
*பிரதேச செயலாளர்.*

*பிரதேச செயலகம்,*
*ராஜாங்கனை.*
*2020.10.21.*

*11- 420*

---

## காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் (104 ஆம் உட்பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள கிரிபாவ பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் இலங்கரத்ன பதிராஜகே நுவன் பிரசாத் திலகரத்ன ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) உட்பிரிவின் கீழ் 1998 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 09 ஆந் திகதி ராஜாங்கனை வம் இவுர யாய 03 இல் வசிக்கும் துடுவகே குணதாச என்பவருக்கு குரு/பிர/19063 ஆம் இலக்க அளிப்பின் கீழ் பராதீனம் செய்யப்பட்ட நிகவெரட்டிய மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் நிக/கிரி/02/49 ஆந் திகதி 1991.09.30 ஆம் பதிவேட்டின் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள கீழ்க்காணும் அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்ட காணிக்கு சட்டரீதியான பின்னுரிமை வாரிசு இல்லை என அறிக்கை செய்யப்பட்டுள்ளதால் இருக்கும் பின்னுரிமை வாரிசு கோர விரும்பவில்லை என பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர்*

*இலங்கரத்ன பதிராஜகே நுவன் பிரசாத் திலகரத்ன ஆகிய நான், இத்தாலின் மூலம் அறியத்தருகின்றேன். ஆதலால் கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் மேற்கூறிய அளிப்பை ரத்து செய்யும் நடவடிக்கைக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் 2021.11.19 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

**அட்டவணை**

*நில அளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 02 ஆம் இலக்க வெளிக்களத்தாளின் பிரகாரம் நில அளவை நாயகம் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 42 ஆம் இலக்க துண்டுகள் வேறாக்கப்பட்ட வரைபடத்திலிருந்து காணித்துண்டு இலக்கம் கு 12 எனக் காட்டப்பட்டுள்ளதும், வடமேல் மாகாணம், குருநாகல் நிருவாக மாவட்டத்திற்குட்பட்ட கிரிபாவ பிரதேச செயலாளர் அலுவலக பிரிவைச் சேர்ந்த வன்னி ஹத்பத்துகே மீ ஒயென் எகொட பற்று/ கோரளையிலுள்ள இல.2 பீ பம்பரே கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ராஜாங்கன வம் இவுர யாய 03 எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் 0.581 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணி. இதன் எல்லைகள் வருமாறு.– ராஜாங்கன யாய வயல்.*

*வடக்கு : இலக்கம் 43 நிலத் துண்டு;*
*கிழக்கு : இலக்கம் 226 நீர்க்கால்வாய்கான ரோட்;*
*தெற்கு : இலக்கம் 41 நிலத்துண்டு;*
*மேற்கு : இலக்கம் 39 கால்வாய்ப் பாதை (ரக்ஷித).*

*நுவன் திலகரத்ன,*
*பிரதேச செயலாளர்.*

*பிரதேச செயலகம்,*
*கிரிபாவ.*
*2021.07.12.*

*11- 421/1*

---

## காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் (104 ஆம் உட்பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவுக்கேற்ப 1985ஆம் ஆண்டு 01 ஆம் மாதம் 23 ஆந் திகதி, ராஜாங்கனை வம் இவுர யாய 02 இல் வசிக்கும் ராஜபக்சே அசிலின் கல்யாணவதி பொடிமெனிகா என்பவருக்கு குரு/காணி/ 10918 ஆம் இலக்க அளிப்பின் கீழ் பராதீனம் செய்யப்பட்ட நிகவெரடிய மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 1989.07.17 ஆந் திகதி நிக/ கிரி/ 02/ 201 ஆம் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள, கீழ்க்காணும் அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்ட காணிக்கு சட்டரீதியான பின்னுரிமை வாரிசு இல்லை என அறிக்கை செய்யப்பட்டுள்ளதால் இருக்கும் பின்னுரிமை வாரிசு கோர விரும்பவில்லை என பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் ஐ. பீ.என்.பீ. திலகரத்ன ஆகிய நான், இத்தாளின் மூலம் அறியத்தருகிறேன். ஆதலால் கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் மேற்கூறிய அளிப்பை ரத்து செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந் நடவடிக்கைக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் 2021.11.19 இற்கு முன்னர் எழுத்து மூலம் எனக்கு தெரிவிக்க வேண்டும்.*

**அட்டவணை**

*நில அளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட கு. 03 ஆம் இலக்க துண்டுகள் வெளிக்களத்தாளின் பிரகாரம் வேறாக்கப்பட்ட வரைபடத்திலிருந்து நில அளவை நாயகம் என்பவரினால் நிர்மாணிக்கப்பட்ட 12 ஆம் இலக்க துண்டுகள் வேறாக்கப்பட்ட வரைபடத்திலிருந்து 12 ஆம் இலக்க பிரதிப்படத்தில் காணித்துண்டு இலக்கம் கு.3 எனக்காட்டப்பட்டுள்ளதும் குருநாகல் நிருவாக மாவட்டத்திற்குட்பட்ட கிரிபாவ பிரதேச செயலாளர் அலுவலக பிரிவைச் சேர்ந்த மீ யென் கொட பற்று/ கோரளையிலுள்ள2 சீ வீபொகுன கிராம அலுவலக பிரிவைச் சேர்ந்த ராஜாங்கன வம் இவுர யாய 02 எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் 01 ஏக்கர் 03 றூட் 09 பேர்ச் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணி. இதன் எல்லைகள் வருமாறு.–*

வடக்கு : துண்டு இலக்கம் 11;
கிழக்கு : துண்டு இலக்கம் 02 (கால்வாய்ப் பாதை ரக்ஷித);
தெற்கு : துண்டு இலக்கம் 13 ;
மேற்கு : துண்டு இலக்கம் 49 (கால்வாய்ப் பாதை ரக்ஷித).

நுவன் திலகரத்ன,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
கிரிபாவ,
2021.06.23.

11- 412/2

## நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 65203.
மாகாணக் காணி ஆணையாளரின் இல. : SPLC /GAL/4/ 13/ 3/ 23.

### முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காலி மாவட்டம்,பலப்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 20B பிராக்மணவத்த தெற்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பிராக்மணவதுகொட எனும் கிராமத்தில் அமைந்துள்ள 2013/32 ஆம் சுவடு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள A மற்றும் B காணித்துண்டுகள் 118 பேர்ச் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டு திரு. ஹெட்டி ஹந்தி சுமித் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : பிபிகா 78 இல் காணித்துண்டு இலக்கம் 46 இன் (ஒரு பகுதி) மற்றும் பிபிகா 78 இல் காணித்துண்டு இலக்கம் 45 ;
கிழக்கு : பிபிகா 78 இல் காணித்துண்டு இலக்கம் 46 பிபிஏ மற்றும் 1246 இல் காணித்துண்டு இலக்கம் 1 ;
தெற்கு : கடற்கரையிலிருந்து பிரதான வீதிக்குச் செல்லும் பாதை ;
மேற்கு : கடற்கரை.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரச முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2021.05.10 ஆந் திகதி தொடக்கம் ) ;

**வருடாந்தக் குத்தகை**.- 2021 ஆம் ஆண்டிற்கான காணியின் விலை பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் பெறுமதி ரூபா ஐந்து மில்லியனுக்கு ( ரூ.5,000,000) குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில் காணியின் அபிவிருத்தி அடையாத பெறுமதியில் 2% மாண்புமிகு அமைச்சரினால் அனுமதிக்கப்பட்ட வருடத்திற்கான விலை மதிப்பீடு ரூபா ஐந்து மில்லியனுக்கு (ரூ.5,000,000) அதிகமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் காணியின் அபிவிருத்தி அடையாத பெறுமதியில் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபட வேண்டும். இந்தக் குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தப்படும் என்பதுடன் திருத்தப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்படும் குத்தகைப் பணத்தின் 20% வட்டி வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.
*தவணைப்பணம்*.- அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளர் மாகாணக் காணி ஆணையாளர் /பிரதிக் காணி ஆணையாளரின் மனம் திருப்பதியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படக் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர்/மாகாணக் காணி ஆணையாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை கட்டுப்படும் ;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2021.05.10ஆந் திகதியிலிருந்து குறைந்தது ஐந்து வருடங்களாகிலும் முடியும் வரை அனுமதிக்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும் அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்.

04. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக் குத்தகை வழங்கப்படும்.

ரி. என். காரியவசம்,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2021, ஒற்றோபர் 28.

11- 423

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/56723.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : පළාත්/ඉකො/ඉ9/නව/දී.බ.04.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

புத்தளம் மாவட்டம்,நவகத்தேகம பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல.646, தம்மன்னவெட்டிய கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த அதுருபோலயகம எனும் கிராமத்தில் அமைந்துள்ள Gev. Surveyor, திரு. W.C.M. Fernando அவர்களினால் வரையப்பட்ட வரைபடத்தில் Pu/ Nawa/ 2014/33 எனும் காணித்துண்டில் ஒரு பகுதி காட்டப்பட்டுள்ளதும், 0.33386 ஏக்கர் (00ஏ.03றூ. 12பே.) விஸ்தீரணமுள்ள அரச காணியின் ஒரு பகுதி திரு. படபெடி ஹேவாவசம்லாகே நிமல் ஜெயரத்ன அவர்களினால் விவசாய நோக்கத்திற்காக குறிப்பிட்ட காலத்திற்கு குத்தகைக்குத் தருமாறு கேட்டு விண்ணப்பித்திருப்பதை இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

காணி இல. A;

வடக்கு : அரச காணி (நாமரத்ன அத்துமீறிக் குடியிருக்கும் காணி);
கிழக்கு : வீதி;
தெற்கு : அரச காணி (நாமரத்ன அத்துமீறிக் குடியிருக்கும் காணி);
மேற்கு : அரச காணி.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்யதுள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (மாண்புமிகு அமைச்சர் அங்கீகரித்த 2019.01.03 ஆந் திகதி தொடக்கம் முன்னோக்கி);

**வருடாந்தக் குத்தகை**.- 2021 ஆம் ஆண்டிற்கான காணியின் விலை பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் பெறுமதி ஐந்து மில்லியனுக்கு ( ரூ.5,000,000) குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில் காணியின் சந்தைப் பெறுமதியில் 2% ஆகும். 2021 ஆம் வருடத்திற்கான விலை மதிப்பீடு ரூபா ஐந்து மில்லியனுக்கு (ரூ.5,000,000) அதிகமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் பிரதான விலை மதிப்பீட்டாளரின் விலை மதிப்பீட்டின் அடிப்படையில் காணியின் சந்தைப் பெறுமதியில் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபட வேண்டும். இந்த குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தப்படும் என்பதுடன் திருத்தப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்படும் குத்தகைப் பணத்தின் 20% வட்டி வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

தவணைப்பணம்.- விதிக்கப்படவில்லை.

(ஆ) குத்தகைக்காரரினால் இக்காணி விவசாய நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படக் கூடாது;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மனம் திருப்பதியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். ;

(ஈ) பிரதேச செயலாளர், இலங்கை முதலீட்டு சபை மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை கட்டுப்படும்;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை

குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்டசத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2019.01.03ஆந் திகதியிலிருந்து குறைந்தது ஐந்து வருடங்கள் நிறைவு பெறும் வரையிலும் சபைக்குள் கைமாற்றம் செய்தல் அல்லது இக்காணி குத்தகைக்குப் பெற்ற நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கைமாற்றம் அல்லது கீழ் குத்தகைக்கு விடுதல் அல்லது கைமாற்றம் செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டாது;

(எ) குத்தகைப் பணத்தினை தவறாமல் செலுத்துதல் வேண்டும். பணம் செலுத்தத் தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படும்.

04. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக் குத்தகை வழங்கப்படும்.

S.A.கலானி M. தனசேகர,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
“மிஹிகத மெதுர”.
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2021, ஒற்றோபர் 15.

11- 424

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/67721.
மாகாணக் காணி ஆணையாளரின் இல. : NWP/ PLC/ L9/ MN/ LTL/17.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

புத்தளம் மாவட்டம், முந்தல் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 609, மதுரங்குளி கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கீர்திசிங்ககம எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் பி.பி.பு. 4825 ஆம் இலக்க சுவடு வரைபடத்தில் காணித்துண்டு 03 எனக் காட்டப்பட்டுள்ளதும் 5 ஏக்கர் விஸ்தீரணமுள்ள அரச காணியை மெத்தை உற்பத்திக்காக தருமாறு டெம்பர்ஸ் பிறைவேட் லிமிட்டட் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

பி.பி.பு. 4825 வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 03 இன் ஒரு பகுதி.

வடக்கு : காணித்துண்டு 2 மற்றும் 4;
கிழக்கு : காணித்துண்டு 2 மற்றும் அரச காணி ;
தெற்கு : அரச காணி (பொங்கோங் தோட்டம்);
மேற்கு : காணித்துண்டு 04 மற்றும் பொங்கோங் தோட்டம் (அரச காணி).

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்னைகளுக்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரச முடிவு செய்யதுள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2021.11.08 ஆந் திகதி தொடக்கம் முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை**.- 2021 ஆம் ஆண்டிற்கான காணியின் விலை பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் பெறுமதி ஐந்து மில்லியனுக்கு (ரூ.5,000,000) குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில் காணியின் சந்தைப் பெறுமதியில் 2%. 2021 ஆம் வருடத்திற்கான விலை மதிப்பீடு காணியின் மதிப்பீடு ரூபா ஐந்து மில்லியனுக்கு (ரூ.5,000,000) அதிகமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் காணியின் சந்தைப் பெறுமதியில் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இந்தக் குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும் என்பதுடன் திருத்தப்பட்ட குத்தகைப் பணம் முடிந்து ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% வட்டி வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

தவணைப்பணம்.- அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தகக் கருத்திட்ட நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படக் கூடாது;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளர் மாகாணக் காணி ஆணையாளர் / பிரதிக் காணி ஆணையாளரின் மனம் திருப்பதியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். ;

(ஈ) பிரதேச செயலாளர், மாகாணக் காணி ஆணையாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை கட்டுப்படும் ;

(உ) கட்டப்பட்டுள்ள மற்றும் கட்டப்பட்ட கட்டிடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை

குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்டசத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2021.11.08ஆந் திகதியிலிருந்து குறைந்தது ஐந்து வருடங்கள் முடியும் வரை இடைக்காலக் குத்தகை அல்லது கைமாற்றம் செய்தல் அனுமதிக்கப்படாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும் அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்;

(ஐ) குத்தகைப்பணம் முறையாக செலுத்தாத பட்சத்தில் 10% தண்டப்பணமாக சேர்க்கப்படும்.

இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக் குத்தகை வழங்கப்படும்.

எஸ். ஏ. கலானி எம். தனசேகர,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2021, நவெம்பர் 10.

11- 617

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/ 10/52594
மாகாணக் காணி ஆணையாளரின்
இல.:පළාත්/ඉකො/ඉ9/වනාතු/දී.බ. 24.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

புத்தளம் மாவட்டம், வனாத்தவில்லுவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல.636/5, பண்டாரநாயக்கபுர கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பண்டாரநாயக்கபுர எனும் கிராமத்தில் அமைந்துள்ள VA/105 உரிமம் பெற்ற நில அளவையாளர் **திரு**. D.J. புள்ளே அதிகாரியினால் வரையப்பட்ட வரைபடத்தில் இல. 01 காணித்துண்டில் ஒரு பகுதி காட்டப்பட்டுள்ளதும், 7.7902 ஏக்கர் (19ஏ.01றூ.00பே.) விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியின் ஒரு பகுதியை திரு. உடுகொடகே சூரியசேன பெரேரா என்பவர் நீண்ட கால குத்தகை தளத்தின் கீழ் eco- friendly சுற்றுலா திட்டத்திற்காகக் குறிப்பிட்ட காலத்திற்கு குத்தகைக்குத் தருமாறு கேட்டு விண்ணப்பித்திருப்பதை இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

**காணி இல. 01.-**

வடக்கு : டேவிட் கமகே மற்றும் பிறகுக்கு சொந்தமான இடம் ;
கிழக்கு : அரச காணி;
தெற்கு : ஜனசக்தி பீஎீடி லிமிட்டட் இற்குச் சொந்தமான காணி மற்றும் வீதி;
மேற்கு : ஜனசக்தி பீஎீடி லிமிட்டட் இற்குச் சொந்தமான காணி.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரச முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.-** முப்பது (30) வருடங்கள் (2021.04.22 ஆந் திகதி தொடக்கம் முன்னோக்கி);

**வருடாந்தக் குத்தகை.-** 2021 ஆம் ஆண்டிற்கான காணியின் மதிப்பீடாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் பெறுமதி சந்தைப் பெறுமதியில் 4% ஆகும். இந்த குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தப்பட வேண்டும் என்பதுடன் இந்திருத்தம் முந்தைய தொகையில் 50% மேல் இருக்கக் கூடாது.

***தவணைப் பணம்.-*** வருடாந்தக் குத்தகைத் தொகையில் 03 முறை;
***தண்டப் பணம்.-*** 2021 ஆம் ஆண்டில் வளர்ச்சியடையாத வணிக மதிப்பீட்டில் 10%;

(ஆ) குத்தகைக்காரரினால் இக்காணி சுற்றுலா திட்டம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படக் கூடாது;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக அக்காணியை மாகாண காணி ஆணையாளர், துணைக்காணி அபராத ஆணையாளர் மற்றும் பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(ஈ) மாகாணக் காணி ஆணையாளர், பிரதேச செயலாளர், இலங்கை சுற்றுலா மேம்பாட்டு ஆணையம் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும் ;

(உ) தற்போது உள்ள மற்றும் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2021.04.22ஆந் திகதியிலிருந்து குறைந்தது ஐந்து வருடங்கள் நிறைவு பெறும் வரையிலும் சபைக்குள் கைமாற்றம் செய்தல் அல்லது இக்காணி குத்தகைக்குப் பெற்ற நோக்கத்தை நிறைவு செய்வதற்குள் கைமாற்றம் அல்லது கீழ் குத்தகைக்கு விடுதல் போன்றவற்றைச் செய்வதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது;

(ஏ) காணிக்கான குத்தகை தவறாமல் செலுத்துதல் வேண்டும். குத்தகைப் பணம் செலுத்தத் தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படும்.

04. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக் குத்தகை வழங்கப்படும்.

S.A. கலானி M. தனசேகரம்,
துணைக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
“மிஹிகத மெதுர”.
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2021, நவெம்பர் 12.

11- 422

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.